அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வந்து குடியேறினாலும், அவர்களுக்கான அடிப்படை வசதி என்பது முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான குடிநீர் வினியோகம் என்பதும் அறவே இல்லை. மேலும் மின்சார வசதி, கழிப்பிட வசதி போன்றவை இன்றி மக்கள் அவதிப்படுகின்றனர். பல குடும்பங்கள் இந்த திறந்த வெளியில் வசிக்க இயலாமல் திரும்பிச் சென்று விட்டனர்.

## குழந்தைகளின் நிலை

'அனைவருக்கும் கல்வி' என்று எல்லாப் பக்கமும் விளம்பரப்படுத்தி வரும் அரசு, 1500 குழந்தைகளின் கல்வியினை கேள்விக்குறியாக்கி உள்ளது. போரூர் ஏரியைச் சுற்றி உள்ள 25 பள்ளிகளில் படித்த குழந்தைகள் இன்று நல்லூர் காஞ்சிபுரம் மாவட்டம், கூடப்பாக்கம் திருவள்ளூவர் மாவட்டம் எனப் பிரிந்து தொலைதூரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதால், அவர்கள் தங்களது படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே நிறுத்தி உள்ளனர். குறிப்பாக 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு படிக்கும் 250 குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பொருளாதார நிலை

ஏழைகள் தங்களின் வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த வீடுகளையும், தங்களுக்கென்று இருந்த ஒரு சில உடைமைகளையும் இழந்து சாலையோரவாசிகளாகும் அளவுக்கு அரசாங்கத்தின் அப்புறப்படுத்தும் முயற்சி போரூர் ஏரிக்கரை வாழ் மக்களின் பொருளார நிலையை பாதித்துள்ளது. மக்கள் தாங்கள் குடியிருந்த பகுதியை விட்டு அப்புறப்படுத்தப்பட்டதால், அவர்களின் வாழ்வதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. அரசு அளித்துள்ள மாற்று இடங்கள் நகர்ப்புறத்திற்கு வெகு தொலைவில் உள்ளதால் போக்குவரத்துச் செலவுக்கும் வழியில்லாமல் அல்லல்படுகின்றனர். இதனால் அவர்களின் வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள குடும்பங்கள் வறுமையினால் வாடும் நிலை, வயிற்றுப் பிழைப்புக்கும் வழியில்லாத நிலை பெரும் வருத்தத்திற்குரியது.

## மனநிலை மற்றும் உடல் நலம்

அரசாங்க அதிகாரிகள் மனசாட்சியற்று, உணர்வுகளற்று வீடுகளை இடிக்கும்போது, மக்களின் பாதுகாப்பை பொருட்டாகக் கருதாமல், வீடுகளை இடிக்கும்பொழுது, வீடுகளில் இருந்த மக்களுள் சிலரை இடிக்கும் கருவிகளோடு தாக்கியுள்ளனர். இதனால்சிலர் உடலளவில் பாதிக்கப்பட்டதோடு அல்லாமல் பெரும்பான்மையான மக்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இங்குள்ள முதியோரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த முதிர்ந்த வயதில் இவர்களுக்கு வெகு தொலைவில் மாற்று இடம் அளித்துள்ளதால் போக்குவரத்து மிகவும்சிரமமாகிறது. மாற்று இடம் கோரி அலைந்து மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

துள்ளித் திரிந்து பள்ளிக்குச் செல்லும் வயதில், இங்குள்ள 5 பள்ளிக் கூடங்கள் இடிக்கப்பட்டதால் இங்குள்ள குழந்தைகள் உடலியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதோடு அல்லாமல், இடையிலேயே பள்ளிக்குச்செல்வதை நிறுத்திவிட வேண்டிய அபாயம் எழுந்துள்ளது. இவர்களின் விழிகளில் பள்ளி சென்று பயிலும் ஏக்கம் தெரிவதை நம்மால் உணர முடியும்.



பெண்கள் தங்களின் வீடுகளை இழந்ததால் தங்கள் குழந்தைகளின் கல்வி, எதிர்காலம் மற்றும் ஜீவாதாரம் போன்றவற்றை நினைத்து மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

அரசு அளித்துள்ள மாற்று இடம் போதிய அடிப்படை வசதி இல்லாததால், இங்குள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நிலை, சுகாதாரம் போன்றவை கேள்விக்குறியாக உள்ளன.

## அரசின் மெத்தனப்போக்கு:

அரசு எந்த முன்னறிவிப்பும் இன்றி வீடுகளை இடித்துத் தள்ளி அவர்களின் உடைமைகளையும் நாசமாக்கி ஒன்றும் அற்றவர்களாக ஆக்கிவிட்டு, அவர்களுக்கான மாற்று இடங்களை ஒதுக்குவதிலும் அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை தீட்டுவதிலும் நஷ்டஈடு வழங்குவதிலும் அக்கறை அற்று உள்ளது. தொடர்ந்து மக்கள் அலைக்கழிக்கப்பட்டு கொண்டு தான் உள்ளனர்.

மாற்று இடம் கிடைக்காதவர்களுக்கு உடனடியாக மாற்று இடம் வழங்கப்பட வேண்டும். பள்ளி செல்ல முடியாத குழந்தைகளுக்கு உடனடியாக பள்ளி செல்ல வசதி செய்துதரப்பட வேண்டும். உள்ளூர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு பள்ளிப் பாடப் புத்தகமும், சீருடைகளும் இலவசமாக வழங்கப்பட வேண்டும். இங்கு வாழும் மக்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர் வினியோகம், இலவச மின்சாரம் மற்றும் கழிப்பிட வசதி போன்றவை உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

இங்கு வாழும் மக்களின் வேலை வாய்ப்பு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். டோக்கன் வழங்கப்பட்டுள்ள 1000 பேருக்கு, இன்னும் அரசு மாற்று இடம் வழங்கவில்லை. எனவே அரசு இந்த மக்களுக்கு உடனடியாக மாற்று இடம் வழங்க வழிவகை செய்ய வேண்டும் என பலக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. ●